
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1321

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

74

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

## கலைஞரைச் சுற்றிய அவதூறு – சூழ்ச்சி வலை!

*1976-ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று, கழக ஆட்சி கலைக்கப்பட்ட அடுத்த நாளே, டெல்லியில் அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்கள், அரசு வேன்களிலும் காவல் துறை வாகனங்களிலும் தமிழ்நாடு முழுவதும் பட்டிதொட்டி எங்கும் கொண்டு செல்லப்பட்டன. அந்த போஸ்டர்களிலும் துண்டுப் பிரசுரங்களிலும் இருந்தது எல்லாம் கலைஞர் குறித்தும், கழக ஆட்சி குறித்தும் அவதூறுகள், அவதூறுகள். அவற்றைத்தான் இன்றும் வாட்ஸ் அப்களில் வாந்தி எடுத்துக் கொண்டிருக்கின்றனர் சிலர்.*

*சென்னையில் உள்ள அண்ணா தியேட்டர், பைலட் தியேட்டர், ஸ்பென்சர் பிளாசா எல்லாவற்றையும் கலைஞர் வாங்கிவிட்டார் என்றன, அந்தப் பொய்ப்பிரச்சாரங்கள். அந்த நாட்கள் குறித்து, 'நெஞ்சுக்கு நீதி'யில் எழுதியுள்ள கலைஞர், "தி.மு.க.வுக்கு எதிராகச் செய்யப்பட்ட அவதூறு பிரச்சாரத்திற்குத் தலைமைதாங்கிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், வழக்குகளையும் சரமாரியாகத் தொடர்ந்துகொண்டே இருந்த காரணத்தினால் மக்கள் திகைத்தனர். குழப்பமுற்றனர்" என்கிறார். அப்படி அன்றைக்கு மக்களைக் குழப்பமடையச் செய்த சூழ்ச்சி வலைகளில் ஒன்றுதான், 'சர்க்காரியா கமிஷன்'.*

*'சர்க்காரியா கமிஷன்' விசாரணை வரம்புக்குள் 28 குற்றச்சாட்டுகள் கொண்டுவரப் பட்டன. ஆனால், இவை அனைத்தும் ஒரே தன்மையுடைய குற்றச்சாட்டுகள் அல்ல. அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தியது, ஒப்பந்தங்கள், அரசு நிறுவனங்கள் தொடர்பான முடிவுகள், தனிநபர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகள் எனப் பல்வேறு வகையான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தன. கமிஷன் அமைந்ததும், ஏப்ரல் மாதத்தில் விசாரணை வேகமெடுத்தது.*

### வேகமெடுத்த விசாரணை

*நீதிபதி சர்க்காரியா, இந்த விசாரணை மிகப்பெரிய அளவிலானது என்று தனது முதல் அறிக்கையிலேயே குறிப்பிட்டார். பல்வேறு நபர்கள், இடங்கள், ஆவணங்கள் ஆகியவற்றிலிருந்து முன் விசாரணைத் தகவல்களைத் திரட்டவேண்டிய நிலை இருந்ததால், ஒன்றியம் மற்றும் தமிழ்நாடு அரசுகளின் விசாரணை அமைப்புகளின் உதவியைப் பயன்படுத்த வேண்டியிருப்பதாக 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் 12 அன்று, ஒரு அறிக்கை அளித்தார். இதன் அடிப்படையில், விசாரணை அமைப்புகள் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆவணங்கள், சாட்சியங்கள், அறிக்கைகள் ஆகியவற்றைத் திரட்டின.*

*இதற்கிடையில், கழகத்தின் சார்பிலும் சர்க்காரியா கமிஷனின் செயல்முறையை எதிர்த்து சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சர்க்காரியா கமிஷன் அமைத்து உத்தரவிடப்பட்ட 3 பிப்ரவரி 1976 , ஒன்றிய அரசின் அறிவிப்பை ரத்து செய்யக்கோரி, கலைஞர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். ஒன்றிய அரசு, ஒரு மாநில அமைச்சரவைக்கு எதிராக இத்தகைய விசாரணையை நடத்த முடியுமா, அறிவிப்பு சட்டப்படி போதுமானதா, கமிஷனின் அதிகார வரம்பு என்ன? போன்ற கேள்விகள் நீதிமன்றத்தில் கழகத்தின் சார்பில் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, அந்த மனுவும் ஒன்றிய - மாநில அரசின் உரிமை சார்ந்ததாக இருந்தது. ஆனால், அன்றைய அரசியல் சூழலில் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.*

*இந்த நிலையில், சர்க்காரியா கமிஷன் விசாரணையில் நடந்த மற்றொரு கேலிக்கூத்து நடந்தது. குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் என்கிற பெயரில், அதிகாரிகளின் வாக்கு மூலங்கள் மட்டுமே பெறப்பட்டன. ஆனால், எதற்கும் ஆதாரம் திரட்ட முடியவில்லை. குறிப்பாக, ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம்..*

*கமிஷன் 28 குற்றச்சாட்டுகளையும் ஒரே நேரத்தில் விசாரித்து, ஒரே முடிவை அறிவிக்கவில்லை. அதன் முதல் அறிக்கை, ஒன்பது குற்றச்சாட்டு எண்கள் தொடர்பான விசாரணையை உள்ளடக்கியது. அவை 3, 11(A), 11(B), 12, 15, 16, 19, 22(C), 22(D). அவற்றில், கலைஞருக்கு வெளிநாட்டில் பரிசாக வழங்கப் பட்ட டிராக்டர், முறைகேடாகப் பயன்படுத்தப் பட்டதாகக் கூறிய குற்றச்சாட்டு.*

*கலைஞருக்கு வெளிநாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட டிராக்டர், அவரது சொந்தப் பண்ணையில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று புகார் அளித்திருந்தார் எம்.ஜி.ஆர்.*

*கமிஷன் விசாரணையில் அந்த டிராக்டர் MASSEY FERGUSON நிறுவனத்தால் கலைஞருக்கு வழங்கப்பட்ட பரிசு என்றும், அதை கலைஞர் கோவை வேளாண் கல்லூரிக்கு வழங்குவதாக அப்போதே அறிவித்திருந்தார் என்றும் ஆவணங்கள் மற்றும் சாட்சிகள்மூலம் பதிவுசெய்தது. டிராக்டர், இறுதியில் அந்த கல்வி நிறுவனத்துக்கே வழங்கப்பட்டதாகவும் கமிஷன் குறிப்பிட்டது. அதாவது, அந்தக் குற்றச்சாட்டு உண்மையில்லை என்று விசாரணையின்மூலம் தெரியவந்தது.*

*இந்த ஒரு உதாரணமே முக்கியமான ஒரு உண்மையைச் சொல்கிறது. கமிஷனில் முன் வைக்கப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டும், ஆதாரத்தின் அடிப்படையில் இல்லை. ஊகத்தின் அடிப்படையில் அமைந்தது. ஆனால், இந்த சர்க்காரியா கமிஷன் குறித்து பின்னாளில் உருவாக்கப்பட்ட அரசியல் பிரச்சாரங்கள் எதுவும் உண்மையைப் பிரித்துப் பார்க்கும் தன்மை கொண்டதாக இல்லை என்றே சொல்ல வேண்டும்.*

### விசாரணைக்கு ஏற்பு; ஆதாரம் இல்லை

*முதல் அறிக்கையின்படி சில குற்றச்சாட்டு களை விசாரணைக்கு உகந்தது என கமிஷன் முடிவுசெய்தது. அதே நேரத்தில், அந்தக் குற்றச்சாட்டுகளிலும் ஆதாரங்கள் இல்லை என்பதை கமிஷன் இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், முதல் அறிக்கையை மட்டும் வைத்துக்கொண்டுதான் அந்தப் பொய்ப் பிரச்சாரங்கள் கட்டமைக்கப்பட்டன. அந்த முதல் அறிக்கை, ஒவ்வொரு குற்றச்சாட்டையும் தனித்தனியாக ஆராய்ந்த ஆவணம் அவ்வளவுதான். முதல் அறிக்கை 19 ஜனவரி 1977 அன்று, ஒன்றிய அரசிடம் சமர்ப்பிக்கப் பட்டது. அதில் அப்போது விசாரணை முடிக்கப்பட்ட ஏழு குற்றச்சாட்டுகளின்கீழ் ஒன்பது அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. பின்னர் 1 ஏப்ரல் 1977 அன்று, அந்த முதல் அறிக்கை நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது. கமிஷனின் பணிக்காலமும் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது.*

*இங்கேதான், இந்த இரண்டாவது பகுதியின் முக்கியமான கேள்வி எழுகிறது. 1972-இல் தொடங்கியது அரசியல் குற்றச்சாட்டு. அதற்கு கலைஞர் அரசு ஆவணங்களுடன் பதிலளித்தது. அந்தப் பதில்களும் ஒன்றிய அரசின் வசம் சென்றன. 1975-இல் புதிய மனுக்கள் சேர்க்கப் பட்டன. 31 ஜனவரி 1976 அன்று, தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது. 3 பிப்ரவரி 1976 அன்று, சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. விசாரணை நடைபெற்றது. 19 ஜனவரி 1977 அன்று முதல் அறிக்கை வந்தது.*

*ஆக, சர்க்காரியா கமிஷனை அதன் இறுதி முடிவுகளை மட்டும் எடுத்துக்கொண்டு புரிந்துகொள்ள முடியாது. அது உருவான அரசியல் சூழலையும், அதற்கு முன் கலைஞர் அரசு அளித்த பதில்களையும், கமிஷன் விசாரித்த குற்றச்சாட்டுகளின் தன்மையையும் சேர்த்துப் பார்த்தால்தான் முழுப் படம் கிடைக்கும்.*

*மேலும் ஒரு சட்டரீதியான வேறுபாட்டையும், இங்கே பதிவுசெய்ய வேண்டும். விசாரணைக் கமிஷன் குற்றவியல் நீதிமன்றம் அல்ல. அது 'கண்டறிந்தவை' தானாகவே ஒரு குற்றவியல் தண்டனை அல்லது நீதிமன்றத் தீர்ப்பாக மாறாது. இந்த வேறுபாட்டை மறைத்துத்தான் பின்னாளில் 'சர்க்காரியா' என்கிற பெயர் அரசியல் முழக்கமாகப் பயன்படுத்தப்பட்டது.*

*அதையும் அப்போதே அம்பலப்படுத்தினார் கலைஞர். குறிப்பாக, அந்த ஆணையத்தின் நோக்கம் என்ன என 06.02.1977 'தினமணி' பல கேள்விகளை எழுப்பி இருந்தது. அதற்கான விடைகளை 'நெஞ்சுக்கு நீதி'யில் எழுதி விளக்கி இருப்பார் கலைஞர்.*

**...தொடரும்**



> **விசாரணைக் கமிஷன் குற்றவியல் நீதிமன்றம் அல்ல. அது 'கண்டறிந்தவை' தானாகவே ஒரு குற்றவியல் தண்டனை அல்லது நீதிமன்றத் தீர்ப்பாக மாறாது.**

## கல்வியில் சமூக நீதி தடத்தை அழிக்கிறதா அரசு?

வரலாற்றில், கல்வி மறுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர் உள்ளிட்ட ஏழைக் குழந்தைகளின் கல்விக்காக மிக முக்கிய திட்டங்களைச் செயல்படுத்தியது, கழகத்தின் 'திராவிட மாடல் அரசு'.

'நான் முதல்வன்', 'இல்லம் தேடி கல்வி', 'எண்ணும் எழுத்தும்', 'புதுமைப்பெண்', 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' எனப் பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தியது. 'செயற்கை நுண்ணறிவு', 'ரோபோட்டிக்ஸ்' உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கொண்டு சென்ற 'டி.என். ஸ்பார்க் (TN SPARK)' திட்டமும் அவற்றில் ஒன்று. அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆயிரம்விளக்கு அரசுப் பள்ளியில் உள்ள அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதவியல் ஆய்வுக் கூடத்தை (STEM LAB) மூடும்படி, த.வெ.க. அரசு உத்தரவிட்டதாகத் தகவல்கள் வெளிவந்தன.

அதே நேரத்தில், அந்தத் திட்டத்தை முன்னெடுத்த பள்ளிக் கல்வித் துறை செயலர் சந்திரமோகன் ஐ.ஏ.எஸ். வேறு துறைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஆயிரம்விளக்கு பள்ளியின் STEM ஆய்வகம் மூடப்பட்டதாகத் தகவல் வெளியாகி விமர்சனங்களை சந்தித்த நிலையில், திட்டம் மறுகட்டமைப்பு செய்யப்பட்டு வருவதாக மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

'திராவிட மாடல் அரசு' செயல்படுத்திய முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, 'காமராஜர்' பெயரில் விரிவுபடுத்தும் த.வெ.க. அரசு, அதைச் செயல்படுத்த அந்தந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியரே, சொந்த செலவில் பொறுப்பேற்க வேண்டும் எனச் சுற்றறிக்கை அனுப்பி, எதிர்ப்பு வந்ததும் திரும்பப் பெற்றது. தற்போது ஊராட்சி நிதியைச் செலவிடும் வகையில், சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அரசாணையை அறிவிப்பதற்கு முன், தகவல் என்கிற வகையில் சொல்வதும், அதற்கு எதிர்ப்புகள் வந்தால் பின் வாங்குவதுமாக த.வெ.க. அரசு மக்களைக் குழப்பிக்கொண்டிருக்கிறது. அந்த வகையில், பள்ளிக் கல்வித் துறையில், சமூக நீதியை வலுப்படுத்துவதற்குப் பதில், அதன் அடித்தள அமைப்புகளையே பலவீனப்படுத்துவதற்குத் துணிந்துள்ளது த.வெ.க. அரசு.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.ஏ.மணி



### தலைவரிடம் தேர்தல் நிதி!

2019-ஆம் ஆண்டு, கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில், நாடாளுமன்றத் தேர்தலுக்கான பணிகளை மேற்கொண்டபோது, திருவொற்றியூர் கிழக்குப் பகுதி ஏழாவது வட்டத்தின் அவைத் தலைவரான எஸ்.ஏ.மணி ஆகிய நான், தலைவரிடம் தேர்தல் நிதி வழங்கிய மகிழ்வான தருணம். இந்த நிகழ்வின்போது வழக்கறிஞர் கண்ணதாசன், ஏழாவது வட்டச் செயலாளர் ஆதி குருசாமி உடன் இருந்தனர்.

**– எஸ்.ஏ.மணி,**
**முன்னாள் நகர மன்ற உறுப்பினர்,**
**மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**சென்னை வடகிழக்கு நெசவாளர் அணி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள்... 

**நல்லுரை**

### 'லாலி' பாட நாங்கள் வரவில்லை!

1960-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னை 59-வது வட்டம், திருவள்ளுவர் மன்றம் 10-வது ஆண்டு விழாவில், உரையாற்றுகையில், கழக உறுப்பினர்களின் சட்டமன்றச் செயல்பாடுகளை விளக்கினார், பேரறிஞர் அண்ணா. சட்டமன்றத்தில் 'திராவிட நாடு' பிரச்சினையைப் பேசும்போது, "உங்களுக்கு இது தவிர வேறு பேச்சே கிடையாதா?" என்று அன்றைய நிதியமைச்சர் கேட்டதாகக் குறிப்பிட்ட அண்ணா, அதற்குத்தான் "நாங்கள் இங்கே வந்து இருக்கிறோம், உங்களுக்கு லாலி பாட அல்ல" என்று பதிலளித்ததாகச் சொன்னார். "ஆட்சியாளர்களை மகிழ்விப்பதற்காக அல்ல; தங்கள் கொள்கையையும் மக்களின் உரிமையையும் எடுத்துச் சொல்வதற்காகவே சட்டமன்றத்துக்குச் சென்றோம்" என்ற அண்ணாவின் பேச்சு, காலத்தால் அழியாமல் உள்ளது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900